உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

தமிழாய்! தமிழனாய்!! தமிழ்மொழிக்காய்!!!

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

5 பதிப்பு : நாகர்கோவில் ♦ 22.10.2026 ♦ மலர் 04 ♦இதழ்: 295 ♦ வியாழன் ♦Edition : Nagercoil ♦22.10.2026 ♦ Vol : 04 ♦Issue : 295 ♦Page : 4 ♦Rs.

அமெரிக்கா, இந்தியா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம்

மும்பை: அமெரிக்கா, இந்தியா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் டீசலுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. கடந்த ஜனவரியில் அங்கு ரூ.85க்கு விற்கப்பட்ட ஒரு லிட்டர் டீசல் தற்போது ரூ.155க்கு விற்கப்படுகிறது.

இந்த சூழலில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் 435 இடங்கள் மற்றும் செனட் அவையின் 35 இடங்களுக்கு வரும் நவம்பர் 3ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. டீசல் விலை உயர்வால் ஆளும் குடியரசு கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்படும் என்று கூறப்படுகிறது. டீசல் தட்டுப்பாட்டுக்கு தீர்வுகாண ரஷ்யாவில் இருந்து டீசலை கொள்முதல் செய்ய அமெரிக்கா ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன் தொடர்ச்சியாக இந்தியாவின் ரிலையன்ஸ்



நிறுவனத்திடம் இருந்து பெருமளவு டீசலை கொள்முதல் செய்ய அமெரிக்க அரசு திட்டமிட்டு உள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ 3 நாட்கள் பயணமாக நேற்று மும்பை வந்தார். குஜராத்தின் ஜாம் நகரில் உள்ள ரிலையன்ஸ் சுத்திகரிப்பு ஆலைக்கு அவர் நேரடியாக சென்றார். ரிலையன்ஸ் குழும தலைவர் முகேஷ் அம்பானி உள்ளிட்டோரை சந்தித்துப் பேச உள்ளார்.

முன்னதாக, மும்பையில் நேற்று மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை அவர் சந்தித்துப் பேசினார். பின்னர் மும்பை தாஜ் மஹால் பேலஸ் ஓட்டலில் உள்ள நினைவிடத்தில் 2008ம் ஆண்டு மும்பை தாக்குதலில் உயிரிழந்தோருக்கு மார்கோ ரூபியோ அஞ்சலி செலுத்தினார்.

இதன்பிறகு நிருபர்களிடம் அவர் கூறியதாவது: அமெரிக்கா, இந்தியா இடையே வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. சில விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அவை களையப்படும்.

வெகு விரைவில் அமெரிக்கா, இந்தியா இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும். பல்வேறு நாடுகளில் இருந்து கச்சா எண்ணெயை இந்தியா கொள்முதல் செய்து வருகிறது. இது மிகச் சிறந்த வணிக நடவடிக்கை ஆகும். கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு துறையில் இந்தியா "சூப்பர் பவராக" உருவெடுத்திருக்கிறது. வெனிசுலா நாட்டின் கச்சா எண்ணெயை இந்திய நிறுவனங்களுக்கு வழங்க தயாராக உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

திருவட்டாறு பகுதியில் உங்களைத்தேடி உங்கள் ஊரில் முகாம்

மாவட்ட ஆட்சித்தலைவர் பங்கேற்பு



நாகர்கோவில், அக்.22

திருவட்டார் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள், பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாகதீர்வுகாணும் முகாம் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்து கொண்டு கூறியதாவது: தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள், நலத்திட்ட உதவிகள், பொது மக்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றும் வகையில் உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் திருவட்டாறு வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு மற்றும் மனுக்கள் வாங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சுருளகோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் தனியார் தோட்டத்தில் 5 ஏக்கர் பரப்பில் கொக்கோ சாகுபடி செய்யப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு, இலாபம் குறித்து உரிமையாளர் மற்றும் தொழிலாளர்களிடம் கேட்டறியப்பட்டது.

பொன்மனை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்சங்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் பொன்மனை நியாய விலைக்கடை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திருவட்டாறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அங்குள்ள மருந்துப் பொருட்களின் இருப்பு விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது.

அருவிக்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் 15 வதுநிதிக்குழுதிட்டத்தின் கீழ் ரூ.45 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. அந்த பணிகளும் பார்வையிடப்பட்டது. தொடர்ந்து திருவட்டாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களின் பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டதோடு, பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்கள் மீது துறைசார்ந்த அலுவலர்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான பயனாளிகளுக்கு உடனடியாக நலத்திட்ட உதவிகள் வழங்குமாறு துறை சார்ந்த அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வுகள் மற்றும் நிகழ்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வேலுமணி, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் டி.மாலதி, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

"கடமையின் பாதையில் இன்னுயிர் நீத்தோருக்கு அஞ்சலி" காவலர் வீரவணக்க நாளில் முதல்வர் விஜய் பதிவு



சென்னை: "கடமையின் பாதையில் இன்னுயிர் நீத்து, அமரர்களான வீரத் தியாகிகளுக்குத் தலைவணங்கி அஞ்சலி செலுத்துவதோடு, காலநேரம் கருதாமல், அயராது உழைத்து, நாட்டின் அரணாகத் திகழும் காவல் துறையினரின் உன்னதப் பணிகளைப் போற்றும் காவலர் வீரவணக்க நாளில், நாட்டில் அமைதியையும், சட்டம் ஒழுங்கையும் நிலைநாட்டும் உயரிய கடமையில் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த காவல் துறையினர் அனைவருக்கும் வீர வணக்கங்கள்!

இயற்கைப் பேரிடர்கள், விபத்துகள், குற்றச் சம்பவங்கள், பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் சூழல்கள் எனப் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, துணிவுடனும், விழிப்புடனும் பணியாற்றும் காவலர்களின் அர்ப்பணிப்பு போற்றுதலுக்குரியது.

கடமையின் பாதையில் இன்னுயிர் நீத்து, அமரர்களான வீரத் தியாகிகளுக்குத் தலைவணங்கி அஞ்சலி செலுத்துவதோடு, காலநேரம் கருதாமல், அயராது உழைத்து, நாட்டின் அரணாகத் திகழும் காவல் துறையினரின் உன்னதப் பணிகளைப் போற்றிடுவோம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள பதிவில், "1959 ஆம் ஆண்டு லடாக் எல்லைப் பகுதியில் தாய்நாட்டைக் காப்பதற்காக வீரமரணமடைந்த 10 மத்திய ரிசர்வ் காவல் படைக் காவலர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க தியாகத்தைப் போற்றும் காவலர் வீரவணக்க நாளில், நாட்டில் அமைதியையும், சட்டம் ஒழுங்கையும் நிலைநாட்டும் உயரிய கடமையில் தங்களது



காவலர் வீர வணக்க நாளை" (Police Commemoration Day) முன்னிட்டு தென்காசி மாவட்டம், ஆய்குடி காவல் நிலையமைதானத்தில்உள்ளகாவலர்நினைவுசின்னத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் 21.10.2026 மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

வானிலை முன்னெச்சரிக்கை: தமிழகத்தின் 18 மாவட்டங்களில் மிக கனமழை வாய்ப்பு

சென்னை: வங்கக் கடலில் அக்.23ம் தேதி உருவாகும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, புயலாக வலுப்பெறும். தமிழகத்தில் (அக்.22) டெல்டா உள்ளிட்ட 18 மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மைய இயக்குநர் வி.ஆர்.துரை இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் அக்.23ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இது புயலாக வலுப்பெறக்கூடும். தமிழக கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது புயலாக வலுப்பெற வாய்ப்பில்லை.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (அக்.22) தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, விருதுநகர், ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், மதுரை, கோவை, நீலகிரி, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும்.

திருச்சி, ஈரோடு, அரியலூர், பெரம்பலூர், கடலூர், நாமக்கல், விழுப்புரம், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி, சென்னை எம்ஜிஆர்நகரில் 15 செ.மீ., வடபழனியில் 14 செ.மீ., சேத்தாப்பேட்டை, சென்னை விமானநிலையம், ஆலந்தூர், காஞ்சிபுரம் மாவட்டம் கொளப்பாக்கத்தில் தலா 13 செமீ, சென்னை மீனம்பாக்கம், டிஜிபி அலுவலகம், மடிப்பாக்கம், வளசரவாக்கம், மதுரவாயல், கன்னியாகுமரிமாவட்டம் குளச்சல் ஆகிய இடங்களில் தலா 12 செமீ மழை பதிவாகியுள்ளது.



தென்காசி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள் 21.10.2026 உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை நகராட்சியில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தினை பார்வையிட்டு வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதை முன்னிட்டு ஏற்படும் பேரிடர்களிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க பயன்படுத்தும் உபகரணங்களை பார்வையிட்டார்.

குமரி ஆயுதப்படை வளாகத்தில் காவலர் வீரவணக்க நாள் அனுசரிப்பு

குமரி ஆயுதப்படை வளாகத்தில் காவலர் வீரவணக்க நாள் அனுசரிப்பு

பணியின்போது உயிர்நீத்த காவலர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் காவலர் வீரவணக்க நாள் அனுசரிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அன்ஷுல் நாகர்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் பங்கேற்றனர்வீரமரணமடைந்த காவலர்களின் நினைவாக மலர் வளையம் வைத்து, 60 குண்டுகள் முழங்க மரியாதைசெலுத்தப்பட்டது.

சட்டம் ஒழுங்கைப் பராமரித்து, பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாக்கும் பணியில் உயிர்நீத்த காவலர்களின் அர்ப்பணிப்பை



யும் தியாகத்தையும் காவல்துறையினர் நினைவுகூர்ந்தனர்.



தென்காசி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள் 21.10.2026 உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை கிராம நிர்வாக அலுவலகத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கன்னியாகுமரி பகவதி அம்மனுக்கு முக்கடல் சங்கமத்தில் நள்ளிரவு ஆறாட்டு

கன்னியாகுமரி, அக்.22 கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் 10 நாட்கள் நவராத்திரி திருவிழா நடப்பது வழக்கம். இந்த ஆண்டுக்கான நவராத்திரி திருவிழா கடந்த 11ம் தேதி தொடங்கி நேற்று முன்தினம் வரை நடந்தது. திருவிழாவையொட்டி தினமும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், பூஜை, வழிபாடு, அலங்கார தீபாராதனை, அன்னதானம், இரவு வாகன பவனி நடந்தன விழாவின் சிகர நிகழ்ச்சியான பரிவேட்டை திருவிழா நேற்று நடந்தது. தொடர்ந்து நள்ளிரவில் அம்மனுக்கு முக்கடல் சங்கமத்தில் ஆறாட்டு நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பின்னர் ஆண்டில் 5 முக்கிய நாட்கள் மட்டுமே திறக்கப்படும் பகவதி அம்மன் கோயிலின் கிழக்குவாசல் திறக்கப்பட்டு அதன் வழியாக அம்மன் கோயிலுக்குள் பிரவேசிக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில்



ஏராளம் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தக்கலையில் நோயாளிகள் நலச்சங்க ஆலோசனைக் கூட்டம் எம்.எல்.ஏ செல்லசுவாமி பங்கேற்பு



கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட தக்கலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நோயாளிகள் நலச்சங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆர். செல்லசுவாமி தலைமை தாங்கினார். இதில் மருத்துவமனை கண்காணிப்பாளர், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் நலச்சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் நோயாளிகள் தெரிவித்த குறைகள் குறித்து விரிவாக கேட்டறியப்பட்டது. குறிப்பாக மருத்துவமனைக்கு தேவையான புதிய மருத்துவ உபகரணங்கள், கூடுதல் பரிசோதனை வசதிகள், குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு தரமான, தடையில்லா சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

புதிய நலத்திட்டங்களை கொண்டு வருவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மயிலாடியில் கலைமகள் விழா தளவாய் சுந்தரம் எம்எல்ஏ பங்கேற்பு



கன்னியாகுமரி அக் 22 குமரி மாவட்டம் மயிலாடி மார்த்தாண்டபுரம் சேந்தன்புதூர் அருள்மிகு ஸ்ரீ சங்கிலி பூதத்தார் சுவாமி திருக்கோவில் விஸ்வகர்ம சமுதாய சார்பில் ஆயுத பூஜை விழாவை முன்னிட்டு 57 வது கலைமகள் விழா நடைபெற்றது. விழாவிற்கு ஊர் தலைவர் கண்ணன் தலைமை தாங்கினார். மயிலாடி பேரூராட்சி மன்ற தலைவர் விஜயலட்சுமி பாபு, கவுன்சிலர் சுப்புலட்சுமி மாணிக்கம், மயிலாடி அதிமுக பேரூர் செயலாளர் மயிலை மனோகரன், ஊர் துணைத் தலைவர் சிற்பி மாருதிராம், செயலாளர் மாரியப்பன், பொருளாளர் ராம்குமார், வக்கீல் சுப்பையன் என்ற ராஜு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் தளவாய் சுந்தரம் கலந்து கொண்டு தேவ் நிர்தியாலயா நாட்டியப் பள்ளியின் பரதநாட்டிய நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்

தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட அனைத்து விஸ்வகர்ம சமுதாய கூட்டமைப்பு தலைவர் மயிலை டாக்டர் மாணிக்கம் அனைவருக்கும் நினைவு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார். விழாவில் கன்னியாகுமரி மாவட்ட அனைத்து விஸ்வகர்மா சமுதாய கூட்டமைப்பு காப்பாளர் டாக்டர்பாஸ்கரன், செயலாளர் டாக்டர் முத்துக்குமார், பொருளாளர் நாகேஷ், முன்னாள் ஊர் தலைவர் மயிலை மகாலிங்கம், நைனார், ஈஸ்வரமூர்த்தி உட்பட கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் ஸ்ரீ சச்சிதானந்தம் சற்குரு வித்யாலயா நடன நாட்டிய பள்ளி சார்பாக தனியார் மண்டபத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவான 13 ஆம் ஆண்டு ஆண்டு விழா அரங்கேற்ற விழா மற்றும் விஜயதசமி கொண்டாட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் புதிதாக கலந்து கொண்ட மாணவிகள் அரங்கேற்ற நிகழ்ச்சி மிக சிறப்பாக இருந்தது. வீணை வாசிக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது

கைலாசநாத சுவாமி கோயிலில் மகர்நோன்பு உற்சவம்

ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



சிவகங்கை, திருப்பத்தூர் அருகே இளையாத்தங்குடி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கைலாசநாத சுவாமி – நித்திய கல்யாணி அம்மன் திருக்கோயிலில், விஜயதசமியை முன்னிட்டு மகர்நோன்பு உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

இதையொட்டி, கோயிலில் ஸ்ரீ கைலாசநாத சுவாமி மற்றும் நித்திய கல்யாணி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன. தொடர்ந்து, சுவாமி மற்றும் அம்மனுக்கு வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இதனைத் தொடர்ந்து, கோயிலுக்கு எதிரேஉள்ள ரத வீதிகளில் சுவாமி ஊர் வலம் நடைபெற்றது. அப்போது பக்தர்கள் வழி நெடுகிலும் திரண்டு நின்று சுவாமியை வழி பட்டனர். விழாவின் முக்கிய நிகழ்வாக, நான்கு திசைகளிலும் அம்பு எய்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வைக் காண ஏராளமான பக்தர்கள் திரண்டிருந்தனர். இந்த மகர்நோன்பு உற்சவத்தில் இளையாத்தங்குடி மற்றும் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர். விழாவையொட்டி கோயில் வளாகம் மற்றும் ரத வீதிகளில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. இதனால் இளையாத்தங்குடி கிராமம் விழாக்கோலம் பூண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரல்வாய்மொழி அருகே மின்சாரம் தாக்கி வாலிபர் உயிரிழப்பு

நாகர்கோவில், அக்.22 ஆரல்வாய்மொழி அருகே செண்பகராமன்புதூர் யாதவர் கீழத்தெருவைச் சேர்ந்த இசக்கியப்பன் என்பவரது மகன் கண்ணன் (25). ஏசி மெக்கானிக்காகப் பணியாற்றி வந்த கண்ணனின் தாய் லலிதா மற்றும் உறவினர்கள் நேற்று காலையில் குலசேகரப்பட்டினம் கோயிலுக்குச் சென்றுள்ளனர். அவரது தந்தை இசக்கியப்பன் வேலைக்காகச் செங்கல் சூளைக்குச் சென்றிருந்தார். இதனால் கண்ணன் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

அப்போது வீட்டின் தொழுவத்தில் இருந்த மாட்டைக் குளிப்பாட்டுவதற்காகத் தண்ணீர் மோட்டாரை இயக்கியுள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கியதில் கண்ணன் தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்துள்ளார். வேலை முடிந்து வீட்டிற்குத் திரும்பிய இசக்கியப்பன், தனது மகன் கீழே விழுந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனடியாக மெயின் சுவிட்ச்சை அணைத்துவிட்டு, அக்கம் பக்கத்தினரின் உதவியுடன் கண்ணனை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், கண்ணன் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து ஆரல்வாய்மொழி காவல் ஆய்வாளர் சுந்தர்ராஜ பெருமாள் விசாரணை நடத்தி வருகின்றார். இச்சம்பவம் ஆரல்வாய்மொழி பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

பித்தளைப்பட்டியில் 550 பனை விதைகள் நடும் விழா!



திண்டுக்கல் பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் சாணார்பட்டி டாக்டர். ஏபிஜே அப்துல் கலாம் அறக்கட்டளை ஆகியோர் இணைந்து பனை வளர்ப்போம் பசுமை பாதுகாப்போம் என்ற நோக்கில் மாபெரும் பனை விதைகள் நடும் விழா நிகழ்ச்சி திண்டுக்கல் மாவட்டம், பித்தளைபட்டி ஊராட்சியில் சுமார் 550 பனை விதைகள் நடப்பட்டன. இவ்விழாவிற்கு திண்டுக்கல் வனத்துறை அலுவலர் சௌந்தரராஜன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றி பனை விதை நடும் விழா நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். திண்டுக்கல் பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் காயத்ரி, திண்டுக்கல் பசுமை தோழி திட்டம் லேகவர்ஷினி, நாட்டு நலப்பணித் திட்டம் அலுவலர் பேராசிரியர் மு.வெண்ணிலா மற்றும் பித்தளைபட்டி ஊர் தலைவர் சாந்தகுமார் மற்றும் ஏபிஜே அப்துல் கலாம் நல அறக்கட்டளையின் நிறுவனர் மருதைகலாம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் திண்டுக்கல் பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகள் சுமார் 50 பேர் கலந்து கொண்டு 550 பனை விதைகளை நட்டனர்.

நீரை சேமிப்போம்!
மரங்களை வளர்ப்போம்!

மாநில அளவிலான ரோலர் நெட்டேட் பால் போட்டியில் கோவை வீரர் வீராங்கனைகள் சாதனை!



கோவை அக்:22 கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் உள்ள அறிஞர் அண்ணா விளையாட்டு மைதானத்தில் 5வது மாநில அளவிலான சப்ஜூனியர் மற்றும் சீனியர் ரோலர் நெட்டேட் பால் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் கோவை, கன்னியாகுமரி, திருப்பூர், திருநெல்வேலி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட அணிகள் கலந்து கொண்டன.

இதில் சப்ஜூனியர் ஆண்கள் பிரிவில் கோவை A அணி தங்கப் பதக்கமும், கோவை B அணி வெள்ளிப் பதக்கமும் வென்றன. சப்ஜூனியர் பெண்கள் பிரிவில் கோவை அணி தங்கப் பதக்கம் வென்றது. அதேபோல், சீனியர் ஆண்கள் பிரிவிலும் கோவை அணி தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தது. வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டன.

இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய மாணவ, மாணவிகள், வரும் டிச மாதம் கோவாவில் நடைபெற வுள்ளதேசிய அளவிலான ரோலர் நெட்டேட் பால் போட்டியில் பங்கேற்கத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளைக் கோவை மாவட்ட ரோலர் நெட்டேட் பால் சங்கத் தலைவர் விஜயராகவன், செயலாளர் நந்தகுமார், பயிற்சியாளர் பிரியதர்ஷினி மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் பாராட்டி வாழ்த்தினார்கள்.

63 குண்டுகள் முழங்க காவலர் தினம் அனுசரிப்பு

சிவகங்கை அக்.22

தேச சேவைக்காக தங்களது இன்னுயிரை தியாகம் செய்த காவலர்களின் நினைவை போற்றும் விதமாக, இன்று தமிழக முழுவதும் காவலர் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது, சிவகங்கை மாவட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அருகே காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா தலைமையில் காவலர் தினம் அனுசரிக்கப்பட்டது, இதில் 63 குண்டுகள் முழங்க, நினைவுத்தூணில்



மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மலர்வலையம் வைத்து அஞ்சலி செலுத்தினார், இதில் காவல்துறை உயர் அதிகாரிகள் நினைவுத்தூணிற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

உதகை வண்டிச்சோலை பகுதியில் சுற்றுச்சுவர் இடிந்து விபத்து

ஆள் நடமாட்டம் இல்லாததால் உயிர்ச்சேதம் தவிர்ப்பு!



நீலகிரி மாவட்டம், உதகை வண்டிச்சோலை பகுதியில் 6வது வார்டுக்கு உட்பட்ட இடத்தில் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டது. சம்பவம் நடந்த நேரத்தில் அப்பகுதியில் ஆள் நடமாட்டம் இல்லாததால் அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. பொதுமக்கள் நடமாடும் பகுதியில் இது போன்ற விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து, சேதமடைந்த சுற்றுச்சுவரைச் சீரமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

குமரி மாவட்ட காலநிலை மாற்ற இயக்க குழுவுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியிடம்

மாவட்ட வன அலுவலகம் அறிவிப்பு

நாகர்கோவில், அக்.22 கன்னியாகுமரி மாவட்ட வன அலுவலகம் சார்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது :

தமிழ்நாடு போன்ற கடலோர மாநிலத்திற்கு காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்த்து போராடுவதும் தணிப்பதும் மிக முக்கியமானது. இதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்க, அரசு காலநிலை மாற்ற தழுவல் மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தை தொடங்கியுள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட காலநிலை மாற்ற இயக்க குழு அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடந்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையின் படி கன்னியாகுமரி மாவட்ட காலநிலை மாற்ற இயக்க குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்குழுவிற்கு அலுவலக பணிகள் மேற்கொள்ளவும், திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி நடத்துவது தொடர்பாகவும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பணியை நிரப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது. இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உயிரியல் அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல், சூழலியல், வனவியல், வனஉயிரினம், பொதுக் கொள்கை மற்றும் இது போன்ற தொடர்புடைய துறைகளில் ஏதேனும் ஒரு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மேலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழி கணினி கல்வியில் அடிப்படை கல்வியறிவு பெற்றிருக்க வேண்டும். குறைந்தது ஒரு வருடம் பணி அனுபவம் உள்ளவர்களுக்கு விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிரந்தர குடியிருப்பு உள்ளவராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் வயது 40 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். பணிபுரிய வேண்டிய காலம் நவம்பர் 2026 முதல் மார்ச் 2028 வரை மட்டுமே. மாத ஊதியம் ரூ.22,000/. எனவே, விண்ணப்பதாரர் தனது சுய விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் தட்டச்சு செய்து kkforestdiv@yahoo.com மின்னஞ்சல் அல்லது மாவட்ட மாவட்ட வன அலுவலர் மற்றும் வனஉயிரின காப்பாளர் அலுவலகம், கன்னியாகுமரி வனக் கோட்டம். அரசுமரமண்டி, நாகர்கோவில், வடசேரி 1. என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். குறிப்பிட்டுள்ள கால அவகாசத்திற்கு பின்னர் வரப்படும் அதாவது 26.10.2026 அன்று மாலை 05.45 மணிக்குள் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வேளாளர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி அறிவியல் கண்காட்சியில் முதலிடம்




ஈரோடு அக் 22

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் பிறந்த நாள் இளைஞர் எழுச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக மாவட்ட அளவில் ஈரோடு அரசு மகளிர் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் 70 பள்ளிகளிலிருந்து 210 அறிவியல் படைப்புகள் இடம் பெற்றன. சூப்பர்சீனியர்பிரிவில் வேளாளர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி பதினோராம்வகுப்புமாணவி பிரதக்ஷனா முதலிடமும் சீனியர் பிரிவில் பத்தாம் வகுப்பு மாணவி மேகவர்ஷனா முதலிடமும் ஜூனியர் பிரிவில் எட்டாம் வகுப்பு மாணவி பிரதிக்ஷா இரண்டாமிடமும் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். வெற்றி பெற்ற மாணவியரது அறிவியல் படைப்புகள்மாநில அளவில்நடைபெறும் அறிவியல் கண்காட்சிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பரிசு பெற்ற மாணவியரைப் பள்ளியின்தானாளர் சந்திரசேகர் முதல்வர் லதா, வேளாளர் அறக்கட்டளை உறுப்பினர்கள் பாலசுப்ரமணியம் யுவராஜா, சென்னியப்பன் மற்றும் ஆசிரியைகள் வாழ்த்துக்கள் தெரிவித்து பாராட்டினர்.



ஈரோட்டை அடுத்த சித்தோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மகளிர் சுயஉதவிக்குழுவினர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி கள் வழங்கப்பட்டது. இதை ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி வழங்கினார்.

திண்டுக்கல்லில் காவலர் வீர வணக்க நாளில் 63 குண்டுகள் முழங்க மலர் வளையம் வைத்து மாவட்ட எஸ்பி மரியாதை



திண்டுக்கல், அக்.22 திண்டுக்கல் மாவட்டம் சீலப்பாடி ஆயுதப்படை வளாகத்தில் உள்ள காவலர் உயிர் நீத்தார் நினைவிடத்தில் அக்டோபர் 21 ஆம் தேதி " காவலர் வீரவணக்க நாளை " முன்னிட்டு திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் ஐபிஎஸ் பணியின் போது வீரமரணம் அடைந்த காவலர்களின் தியாகத்தை போற்றும் வகையில்63குண்டுகள்முழங்க மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்ட காவல்துறை தலைமையிட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கருணாகரன், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண் காணிப்பாளர் ரமேஷ், மற்றும் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர்கள், காவல் நிலைய ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள் ஆகியோர்கள்கலந்துகொண்டு மரியாதை செலுத்தினார்கள்

மார்த்தாண்டம் அருகே பைக்கில் 2 கிலோ கஞ்சா பறிமுதல்

கல்லூரி மாணவர் உட்பட 2 பேர் கைது

மார்த்தாண்டம், அக்.22 மார்த்தாண்டம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சுஜின் தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் நட்டாலம் நெடுஞ்சாலை பகுதியில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக பைக்கில் இரண்டு வாலிபர்கள் வந்தனர். இதை அடுத்து சந்தேகத்தின் பேரில் போலீசார் பைக்கை நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது அவர்கள் வைத்திருந்த பையில் சுமார் 2 கிலோ 100 கிராம் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து அவர்களிடம் நடத்திய விசாரணையில் ஒருவர் செறு வல்லூர் பகுதியை சேர்ந்த ரெனாட்டோ (29), செருவாட்டுகோணம் பகுதி சேர்ந்த அபிஜித் ஆகியோர் என்பது தெரிய வந்தது. இதில் அபிஜித் விழுப்புரத்தில் உள்ள ஒரு நர்சிங் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். தொடர்ந்து கஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார் ரெனாட்டோ, அபிஜித் ஆகியோரை கைது செய்தனர். தொடர்ந்து இவர்களுக்கு கஞ்சா எங்கிருந்து கிடைத்தது? மாணவர்களிடம் விற்பனை செய்வதற்காக கஞ்சா வாங்கினார்களா? இதன் பின்னணியில் வேறு யாராவது உள்ளார்களா? என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

குமரியில் பைக் திருடிய கேரள மாநில சிறுவர்கள்; 3 பேர் கைது

நாகர்கோவில், அக்.22 கன்னியாகுமரி மாவட்டத்தில் பொது இடங்கள் மற்றும் வீட்டின் முன்னால் நிறுத்தி இருக்கும் இருசக்கர வாகனங்கள் திருட்டுபோவதுதொடர் கதையாக நடந்து வருகிறது. இந்த பைக் திருடர்களை பிடிக்க மாவட்ட எஸ்பிஉத்தரவின்பேரில் தனிப்படை அமைக்கப்பட்டு, தனிப்படையினர் தொடர் விசாரணையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த நிலையில் நாகர்கோவில் அருகே உள்ள புத்தேரியில் வீட்டின் முன் நிறுத்தியிருந்த பைக் ஒன்று திருட்டுப் போனது. இது குறித்து வடசேரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். மேலும் அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான பதிவுகளை ஆய்வு செய்தனர். ஆய்வில் பைக்கை மூன்று பேர் சேர்ந்து திருடி சென்றிருப்பது தெரிய வந்தது.

அதன் அடிப்படையில் போலீசார் நடத்திய விசாரணையில் பைக் திருட்டில் ஈடுபட்டது கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கண்டறியப்பட்டது. இனை அடுத்து தனிப்படை போலீசார் கேரள மாநிலத்தில் சென்று பைக் திருட்டில் ஈடுபட்ட மூன்று பேரை பிடித்தனர். பின்னர் அவர்களை வடசேரி போலீஸ் நிலையம் கொண்டு வந்து நடத்திய விசாரணையில் அவர்கள் பைக் திருடியதை ஒப்புக்கொண்டனர். பிடிபட்ட மூன்று பேரும் 17 வயதுடைய சிறுவர்கள் என தெரிய வந்தது. மேலும் 3 சிறுவர்களும் வேறு திருட்டில் ஈடுபட்டுள்ளார்களா? என்ற அடிப்படையில் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் திருடியே 2 பைக்கை போலீசார் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட மூன்று பேரையும் போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

வெளியூருக்கு இயக்குவதால் குமரியில் 100க்கும் மேற்பட்ட அரசு பஸ்கள் நிறுத்தம்

பயணிகள் கடும் அவதி

நாகர்கோவில் அக்.22 சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை தொடர்விடுமுறை முடிந்து பொதுமக்கள் பணியாளர்கள் வெளியூர்களுக்கு திரும்பும் வகையில் சென்னை, கோவை, சேலம் உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் வழக்கமாக இயங்கும் உள்ளூர் கிராமப்புற பேருந்துகள் பெருமளவில் எடுக்கப்பட்டு சிறப்புகளாக மாற்றப்பட்டுள்ளன.

இதன் காரணமாக குமரி மாவட்டத்தில் குலசேகரம், அருமனை, குளச்சல், திங்கள் நகர், திருவட்டாறு, கன்னியாகுமரி போன்ற வழித்தடங்களில் இயங்கி வந்த நூற்றுக்கும் மேற்பட்ட உள்ளூர் பேருந்துகள் கடந்த இரண்டு நாட்களாக திடீரென நிறுத்தப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பேருந்து போக்குவரத்து சேவை இல்லாததால், . பள்ளி கல்லூரி மாணவர்கள், . கூலித் தொழிலாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் நூறு சதவீதம் அரசு பேருந்துகளை நம்பி வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

மாவட்டத்தில் மொத்தம் சுமார் 750 அரசு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்த நிலையில் பண்டிகை காலங்கள் வரும்போது எல்லாம் உள்ளூர் பேருந்துகளை ரத்து செய்துவிட்டு அவற்றை வெளியூர்களுக்கு சிறப்பு பேருந்துகளாக இயக்குவதை அதிகாரிகள் வாடிக்கையாக கொண்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனால் தற்போது நாகர்கோவில் வடசேரி பேருந்து நிலையம், அண்ணா பேருந்து நிலையம்உள்ளிட்ட மாவட்டத்தில் உள்ள பல்வேறு பேருந்து நிலைய முக்கிய முனையங்கள் வெறிச்சோடி காணப்படுகின்றன.' நேரம் பேருந்துகளுக்காக மணி நேரமாக காத்துக பயணிகளின் கூட்டம் அலைமோதுகிறது. முதியவர்கள், கைக்குழந்தைகளுடன் வந்த பெண்கள் உள்ளிட்டோர் தங்களது கிராமங்களுக்கு செல்ல பேருந்துகள் இன்றி தவித்து வருகின்றனர். இதனால் வேறு வழி என்று கூடுதல் கட்டணம் செலுத்தி ஆட்டோ வாடகைக்காரர்களை நாட வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

டிபி வேர்ல்ட் இந்தியா சாம்பியன்ஷிப்பில் கோல்ஃப், கிரிக்கெட் ஜாம்பவான்கள் வடிவமைத்த 'லாக்கர் ரூம்' அறிமுகம்



சென்னை: சர் நிக் ஃபால்டோ, கெவின் பீட்டர்சன், சாச்சின் டெண்டுல்கர் மற்றும் ரோரி மெக்ல்ராய் உள்ளிட்ட கோல்ஃப் மற்றும் கிரிக்கெட்டில் உள்ள மிகப்பெரிய பெயர்கள் இந்த ஆண்டு டிபி உலக இந்தியா சாம்பியன்ஷிப்பில் ரசிகர்களுக்கு ஒரு முன்வரிசை இருக்கை வழங்கும் ஒரு புதிய இரண்டு முறை தினசரி ஒளிபரப்பப்பட்டது. டெல்லி கோல்ஃப் கிளப்பின் ஆளுமைகள், உரையாடல்கள் மற்றும் திரைக்குப் பின்னால் உள்ள கதைகளுக்கு.டிபிவேர்ல்ட் வழங்கிய லாக்கர் அறை அக்டோபர் 1518 முதல் சாம்பியன்ஷிப் முழுவதும் இயங்கும், இது ரசிகர்களுக்கு போட்டி மற்றும் அதன் இதயத்தில் உள்ள மக்களைப் பற்றிய புதிய முன்னோக்கை வழங்குகிறது. கோல்ஃப் சேனல் தொகுப்பாளர், அண்ணா ஜாக்சன் கோல்ஃப் புராணக்கதைசர்நிக்ஃபால்டோ மற்றும் முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட் கேப்டன் கெவின் பீட்டர்சன் ஆகியோருடன் நிகழ்ச்சியை நடத்துவார். வாரம் முழுவதும் விருந்தினர்கள் இந்திய கிரிக்கெட் பெரியவர்களான சாச்சின் டெண்டுல்கர் மற்றும் யுவராஜ் சிங், ரோரி மெக்ல்ராய் மற்றும் நடப்புசாம்பியனானடாமி ஃப்ளீட்வுட் உள்ளிட்ட சாம்பியன்ஷிப் துறையின் நட்சத்திரங்களுடன் இருப் பார்கள். டிபி வேர்ல்ட்டின் குழு தலைமை தகவல் தொடர்பு அதிகாரி டேனியல் வான் ஓட்டெர்டிஜ்க் கூறினார்: "இந்தியா விளையாட்டு மீது ஒரு அசாதாரண ஆர்வத்தைக் கொண்டுள்ளது,மேலும்கோல்ஃப் மற்றும் கிரிக்கெட்டில் மிகப்பெரிய பெயர்களில் சிலவற்றை ஒன்றிணைப்பது ரசிகர்களுக்கு தனித்துவமான ஒன்றை உருவாக்க எங்களுக்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறது. லாக்கர் அறை நிச்சயமாக என்ன நடக்கிறது என்பதை விட அதிகம், இது ஆளுமைகள், உரையாடல்கள் மற்றும் கதைகளைப் பற்றியது, இது விளையாட்டை மிகவும் கட்டாயமாக்குகிறது.



நாகர்கோவில் அரசு ரப்பர் கழக அலுவலகத்தை முற்றுகையிட்ட 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள்: ரூ.200 ஊதிய உயர்வு கோரி போராட்டம்



நாகர்கோவில், அக்.22: கன்னியாகுமரி மாவட்டம் கீரிப்பாறை அரசு ரப்பர் கழகத்தில் பணியாற்றும் ரப்பர் பால் வெட்டும் தொழிலாளர்கள், ஊதிய உயர்வு கோரி நாகர்கோவில் வடசேரியில் உள்ள அரசு ரப்பர் கழக அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.கீரிப்பாறை அரசு ரப்பர் கழகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பால் வெட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் 100க்கும் மேற்பட்டோர் தற்காலிகத் தொழிலாளர்களாக உள்ளனர். பல ஆண்டுகளாக ஊதிய உயர்வு கோரி வரும் தொழிலாளர்கள், கடந்த இரண்டு மாதங்களாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தற்போது நாளொன்றுக்கு ரூ.650 ஊதியம் வழங்கப்படுவதாகவும், இதில் ரூ.200 உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். ஆனால், அரசு தரப்பில் ரூ.40 முதல் ரூ.50 வரை மட்டுமே உயர்த்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும், இரவு நேரங்களில் காடுகளில் யானை, கரடி உள்ளிட்ட வனவிலங்குகளுக்கு இடையே உயிரைப்பணயம்வைத்து வேலை செய்வதாகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர். அலுவலகவாயிலை முற்றுகையிட்டபோது போலீசார் தடுத்ததால் இருதரப்பினருக்கும் இடையேதள்ளுமுள்ளும் வாக்குவாதமும் ஏற்பட்டது. ஊதிய உயர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனத் தொழிலாளர்கள் அறிவித்தனர். இதனால் வடசேரி சந்திப்பில் பரபரப்பு நிலவியது.

விளாத்திகுளத்தில் விவசாயிகள் சாலை மறியல் 40 பேர் கைது



விளாத்திகுளம் அக். 22 தேர்தல் வாக்குறுதி படி விவசாயிகளில்கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள கடன்களைமுழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், தற்போது சாகுபடி நடைபெற்றுவரும்நிலையில் நிபந்தனை இன்றி விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டும்,2025 26ம் ஆண்டுக்கான பயிர் காப்பீட்டு தொகையை விடுவிக்க வேண்டும். விவசாய பயிர்களை அழித்து வரும் காட்டுப் பன்றி, மான் உள்ளிட்ட வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்நிலைகளில் உள்ள கரைகளை பலப்படுத்த வேண்டும், நீர்ப்பாசன கால்வாய்களை தூர் வார வேண்டும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை ரத்து செய்யும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்கள், அகில இந்திய விவசாயிகள் மகாசபை சார்பில் தோழர்கள் புவிராஜ், பிச்சையா, சண்முகப் பெருமாள் தலைமையில் பேருந்து நிலையம் முன்பு சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டு 40 பேரை போலீசார்கைது செய்துதனியார் மண்டபத்தில்தங்கவைத்துள்ளனர்.

மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை சாதனை: 500 ரோபோட்டிக் அறுவை சிகிச்சைகள் நிறைவு!



மதுரை: மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை (MMIIRC) மற்றும் மீனாட்சி சூப்பர்ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை (MSSII) ஆகியவை கடந்த 10 ஆண்டுகளில் 500 ரோபோட்டிக் அறுவைசிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்து வரலாற்றுச் சாதனைப் படைத்துள்ளன. இதில் 'டாவின்சி' ரோபோட்டிக் கருவி மூலம் 350 சிகிச்சைகளும், நவீன 'மோய்' கருவி மூலம் 150க்கும் மேற்பட்டசிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தென் தமிழகத்திலேயே முதன்முறையாக கணையம், உணவுக்குழாய், கல்லீரல், பெருங்குடல், சிறுநீரகம், புற்றுநோய்மற்றும்இதயவியல் உள்ளிட்ட உள்ள சிக்கலான நோய்களுக்கு ரோபோட்டிக் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இம்மருத்துவமனை முன்னோடியாகத் திகழ்கிறது. இது குறித்து மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர்டாக்டர்ரமேஷ் அர்த்தநாரி பேசுகையில், "500 என்ற மைல்கல் எங்களின் மருத்துவ நிபுணத்துவத்திற்கும் அர்ப்பணிப்பிற்கும் சான்றாகும். எதிர்காலத்தில் உறுப்பு மாற்று அறுவைசிகிச்சைக்கும் இத்தொழில்நுட்பம் விரிவுபடுத்தப்படும்" என்றார். குடல் மற்றும் இரையக குடலியல் அறுவைசிகிச்சைத் துறை தலைவர் டாக்டர்மோகன் பேசுகையில், "ரோபோட்டிக் சிகிச்சை முறையில் இரத்த இழப்பு, வலி மற்றும் மருத்துவமனையில் தங்கும் காலம் குறைகிறது. இத்தொழில்நுட்ப வளர்ச்சி எதிர்காலத்தில் தொலைதூர அறுவைசிகிச்சைகளுக்கும் (Telesurgery) வழிவகுக்கும்" எனக் கூறினார்.

இச்சாதனைக் குறித்து விவரிப்பதற்காக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மருத்துவமனை இயக்குநர், துறைச் சார்ந்த முதுநிலை மருத்துவ நிபுணர்கள் பலர் கலந்து கொண்டனர்.

படந்தாலுமூடு மதுபான பாரில் வாலிபர் கொலை கேரளாவுக்கு தப்பிய கொலையாளியை பிடிக்க 2 தனிப்படைகள் அமைப்பு

களியக்காவிளை, அக்.22 களியக்காவிளை அருகே படந்தாலுமூட்டில் தனியார் மதுபான பார் செயல்பட்டு வருகிறது.இந்தபாரில்வைத்து கடந்த செப்டம்பர் மாதம் 8 ம் தேதி மடிச்சல் பகுதியைசார்ந்த ஜோசப் (50) மது குடித்து கொண்டு இருந்தார். அப்போது மர்ம நபர் ஒருவர் பாரில் புகுந்து ஜோசப்பை வெட்டி விட்டு தப்பி சென்றார்.

படுகாயம் அடைந்த ஜோசப்பை அப்பகுதியினர் மீட்டு ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிட்சை அளித்து வந்தனர். தொடர்ந்து மேல்சிகிட்சை அளிக்க திருனந்தபுரம் தனியார் ஆஸ்பத்திரியில் சிகிட்சைக்காக சேர்த்தனர். நேற்று முன்தினம் சிகிட்சை பலனின்றி ஜோசப் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து களியக்காவிளை போலீசார்வழக்குபதிவுசெய்து விசாரணை நடத்தினர். மேலும் குற்றவாளியை பிடிப்பதற்காக அந்தபகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா காட்சிகளை போலீசார் ஆய்வு செய்தனர்.

அதில் ஜோசப்பை வெட்டியது அவரது மனைவியின் சகோதரி கணவரான மீனச்சல் பகுதியை சேர்ந்த மணிகண்டன் (40) என்பது தெரிய வந்தது. வெளிநாட்டில் வேலை பார்த்து வந்த மணிகண்டனுக்கும் ஜோசப்புக்கும் தகராறு இருந்து வந்ததாக தெரிகிறது.

இந்த முன் விரோதத்தில் ஆத்திரமடைந்து மணிகண்டன் மது குடித்துக் கொண்டிருந்த ஜோசப்பை வெட்டு கத்தியால் வெட்டியதாக தெரிய வந்தது. தற்போது மணிகண்டன் கேரள மாநிலத்திற்கு தப்பி சென்றுள்ளது தெரிய வந்துள்ளது. போலீசார் 2 தனிப்படைகள் அமைத்து கேரளாவுக்கு சென்று மணிகண்டனை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கிருஷ்ணகிரியில் காவலர் வீர வணக்க நாள்:

வீரமரணம் அடைந்த காவலர்களுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை





கிருஷ்ணகிரி, அக்.22:

கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் காவலர் வீர வணக்க நாள் அனுசரிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ் குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.சி. அனிதா ஆகியோர் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், வீரமரணம் அடைந்த காவலர்களுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் உறுதிமொழி ஏற்று, இரண்டு நிமிடங்கள் மவுன அஞ்சலி செலுத்தினர். பின்னர் காவல்துறையினர்மூன்றுசுற்றுகளாகத் துப்பாக்கிக் குண்டுகள் முழங்க மரியாதை செலுத்தினர்.

கடந்த 1959ம் ஆண்டு அக்டோபர் 21ம் தேதி, லடாக்கின் ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் சீன ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 10 மத்திய பாதுகாப்புப் படைக் காவலர்களின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் இந்நாள் கடைப்பிடிக்கப் படுகிறது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கடந்த ஓராண்டில் பணியின்போது உயிரிழந்த 154 காவலர்களின் தியாகத்தையும் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் த.மஞ்சுளா, கூடுதல் காவல் கண்காணிப் பாளர் நமச்சிவாயம், முன்னாள் படைவீரர் நலத்துறை துணை இயக்குநர் லெப்டினன்ட் கர்னல் அருள்மொழி உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள், காவலர்கள் மற்றும் முன்னாள் காவல் துறையினர் கலந்து கொண்டனர்.

தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் புள்ளியல் துறை சார்பில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா



தருமபுரி,அக்.22

தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் புள்ளியில்துறை சார்பில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா கல்லூரி முதல்வர் முனைவர் கோ கண்ணன் அவர்களின் வழிகாட்டலின் படி கல்லூரி அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் புள்ளியல் துறை முதலாம் ஆண்டு மாணவர்கள் கடைபிடிக்க வேண்டிய நல் ஒழுக்கம் மற்றும் கல்வி சார்ந்த நடைமுறைகள் குறித்தும் புள்ளியல் பாடம் படிப்பதின் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் போட்டி தேர்வுகள் முக்கிய அம்சங்கள் எடுத்து ரைக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் தாவரவியல் துறை தலைவர் முனைவர் கோ பிரபாகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். துறைத்தலைவர் கோ. பி. பிரீத்தா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியவர். E.அர்ச்சனா,பூந்தென்றல்(இளம்நிலை) இரண்டாம் ஆண்டு மனைவிகள் வரவேற்றனர். முதுகலை முதலாம்ஆண்டுமாணவி ரா.கமலி, துறைதலைவர்கள் திருச்சி முருகன், ஆர். பாஸ்கர் , முனைவர் V. செந்தில்குமார், முனைவர் I வெங்கடேசன், முனைவர் A .கிரித்திக் வைரமாரியப்பன், முனைவர் M. கோவிந்தன், முனைவர் K. காவிய மணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முதலாம்ஆண்டுமாணவ, மாணவிகளுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. இதில் பல்வேறு விதமான விளையாட்டு போட்டி மற்றும் நடன நிகழ்ச்சி நடைபெற்றன. இதில் முதலாம்ஆண்டுமாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் . முதமிழா, மீனலோட்சனி ஆகியோர் நன்றி கூறினர்.

நீலகிரி மாவட்டம் மசினகுடியில் வனவிலங்கு தாக்கி 2 பசுமாடுகள் உயிரிழப்பு!

கால்நடைகளை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறி



நீலகிரி மாவட்டம், மசினகுடி பகுதியில் வனவிலங்கு தாக்கியதில் இரண்டு பசுமாடுகள் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் கால்நடைகளை நம்பி அன்றாடம் வாழ்வாதாரம் நடத்தி வரும் பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.

ஏற்கனவேபல்வேறு பொருளாதாரசிரமங்களைச் சந்தித்து வரும் கிராமப்புற மக்கள், கால்நடைகள் உயிரிழப்பால்பெரும்இழப்பைச்சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வனவிலங்குகளால் ஏற்படும் இத்தகைய பாதிப்புகளைத் தடுக்க வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், உயிரிழந்த கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி ஐஏஎஸ் குஜிலியம்பாறை வட்டத்திற்குட்பட்ட தனியார் மஹாலில் அரசு அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் மேற்கொண்டு, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில், பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சாந்தி, தனி துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஹென்றி பீட்டர் உட்பட பலர் உள்ளனர்

பேட்மிண்டன் வீரர் சிவராஜன் சோலைமலைக்கு ரூ.50 லட்சம் ஊக்கத் தொகை

முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: பாரா ஆசிய விளையாட்டு போட்டியில் பேட்மிண்டன் விளையாட்டில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற தமிழக வீரர் சிவராஜன் சோலைமலைக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'ஜப்பானில் நடைபெற்றுவரும் 5வது பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பேட்மிண்டன் விளையாட்டில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய அணிக்கும், அந்த அணியில் இடம்பெற்றுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர் சிவராஜன் சோலைமலைக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள்.

வீரர் சிவராஜன் சோலைமலையின் சாதனையைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.50 லட்சம் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்படும். அவரது கடின உழைப்பு மற்றும்விடாமுயற்சியால் இச்சாதனையைப் படைத்துள்ளார்.

தமிழ்நாட்டின் இளம் பாரா விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு புதிய ஊக்கத்தை அளித்திடும் வகையில் அவரது வெற்றி அமைந்துள்ளது. வீரர் சிவராஜன் சோலைமலை, மேலும் பல வெற்றிகளைப் பெற்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்க வாழ்த்துகள்' எனத் தெரிவித்துள்ளார்.

கஸ்தூரிக்கு ரூ.50 லட்சம் ஊக்கத்தொகை

முதல்வர் விஜய் மற்றொரு பதிவில், "ஜப்பானில் 5வது பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில், பெண்களுக்கான வலுதூக்குதல் போட்டியில் 67 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்று தமிழகத்துக்கும், இந்தியாவுக்கும் பெருமை சேர்த்துள்ள வீராங்கனை கஸ்தூரி ராஜாமணிக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது சாதனையை பாராட்டும் வகையில் தமிழக அரசு சார்பில் ரூ.50 லட்சம் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்படும். வீராங்கனை கஸ்தூரி ராஜாமணியின் தன்னம்பிக்கை, அயராத உழைப்பு, விடாமுயற்சி ஆகியவற்றின் மூலம் பெற்றுள்ள இந்த மகத்தான வெற்றி, தமிழகத்தின் இளம் பாரா விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும். அவர் தொடர்ந்து பல வெற்றிகளை பெற்று தமிழகத்துக்கும் இந்தியாவுக்கும் பெருமை சேர்க்க எனது வாழ்த்துகள்" என்று கூறியுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், தலைமையில் அரக்கோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று(21.10.2026) "உங்களைத்தேடி, உங்கள் ஊரில்" திட்டமுகாமில் அரக்கோணம் வட்டத்திற்குட்பட்ட அனைத்து கிராமப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள் தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் திட்ட இயக்குனர் ஊரக வளர்ச்சி முகமை ச.செல்வராணி, சமூக பாதுகாப்பு திட்டம் தனி துணை ஆட்சியர் கீதாலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர் ரமேஷ் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் உள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் காவலர் வீரவணக்கம் நாள் அனுசரிப்பு



கடலூர் மாவட்டத்தில் காவலர் வீரவணக்கம் நாள் அனுசரிப்பு இந்நிகழ்வில் காவல் கண்காணிப்பாளர் .விவேகானந்த சுக்லா IPS, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் . கோடீஸ்வரன், ரகுபதி, சிறைத் துறை கண்காணிப்பாளர் பரசுராமன் , தீயணைப்புத் துறை நிலைய அலுவலர் குமார், துணை காவல் கண்காணிப்பாளர்கள் . அப்பாண்டைராஜ், தமிழ் இனியன், ஊர்க்காவல் படை வட்டார தளபதி அகிலன், ஓய்வு பெற்ற துணை காவல் கண்காணிப்பாளர்கள் . அறிவழகன், முரளி தரன், காவல் ஆய்வாளர் இளவரசி, கடலூர் சரக வன அலுவலர் திரு. திலகராஜ், உதவி ஆய்வாளர் நடராஜன், தலைமை காவலர்கள் மதன்குமார், நிவதா , பெண் காவலர் சசிகலா ஆகியோர் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினர்.

நீரை சேமிப்போம்!
மரங்களை வளர்ப்போம்!

பயிர் கடன் தள்ளுபடி செய்ய கேட்டு குமரியில் 4 இடங்களில் விவசாயிகள் மறியல் போராட்டம்



நாகர்கோவில், அக்.22

தமிழகத்தை ஆளும் தவெக அரசு தேர்தல் வாக்குறுதிப்படி ஐந்து ஏக்கருக்குகீழ்உள்ளஅனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். மின்சார இணைப்புகளுக்கு ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தும் திட்டத்தை கைவிட வேண்டும். விவசாயிகளுக்கு பயிர்க்கடன் உடனடியாக வழங்கிட வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் விவசாய சங்கம் சார்பாக கூட்டுறவு நிறுவனங்கள் முன் சாலைமறியல் போராட்டம் நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் நாகர்கோவில் கிருஷ்ணன் கோவில் சந்திப்பு, கருங்கல், திருவட்டாறு, அருமனை ஆகிய நான்கு இடங்களில் இந்த மறியல் போராட்டங்கள் நடைபெற்றது.

இதில் நாகர்கோவில் கிருஷ்ணன் கோவிலில் அகில இந்திய விவசாய சங்கம் குமரி மாவட்ட குழு சார்பில் சாலை மறியல் நடைபெற்றது. போராட்டத்துக்கு குமரி மாவட்ட பொருளாளர் விஜி தலைமை வகித்தார்.

மறியல் போராட்டத்தை துணைச் செயலாளர் சைமன் சைலஸ் தொடங்கி வைத்தார். போராட்டத்தில் ஏராளமான கலந்து கொண்டனர். கருங்கல் உழவர் பணி கூட்டுறவு சங்கம் முன்நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு கிள்ளியூர் கிழக்கு வட்டார தலைவர் எம்.ஏ.சாந்தகுமார் தலைமை தாங்கினார். போராட்டத்தைமாவட்ட துணைத் தலைவர் தொடங்கி வைத்து பேசினார். போராட்டத்தை சிஐடியுமாவட்டதுணைத் தலைவர் சோபனராஜ், கட்டுமான சங்க வட்டார செயலாளர் நசலானந்த ராஜ், மாவட்டகுழு உறுப்பினர் பத்மதேவன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். சசீந்திரன், சணல்குமார், பால்ராஜ் உட்பட பலர் கைதாகினர். மேலும் திருவட்டாறு, அருமனைபகுதிகளில் நடைபெற்ற மறியல் போராட்டத்திலும் விவசாயிகள் கைது செய்யப்பட்டனர்.

பொள்ளாச்சி பட்டாசு வணிகர்கள் சங்கத்தின் சார்பில் பொதுக் குழு கூட்டம்!



கோவை அக்: 22

பொள்ளாச்சி பட்டாசு வணிகர்கள் சங்கத்தின் சார்பில் வால்பாறை சாலை சுக்கிர மஹாலில் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. நிகழ்விற்கு பொள்ளாச்சி பட்டாசு வணிகர்கள் சங்க தலைவர் கே.சி. செல்வக்குமார், செயலாளர் ராமகிருஷ்ணன், பொருளாளர் சேதுராமன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் வேலையில் சரவெடி வெடிக்க அனுமதி தந்த உச்சநீதி மன்ற தீர்ப்புக்கு நன்றி தெரிவித்தும், அடுத்த ஆண்டு கடைகளின் எண்ணிக்கையை குறித்தும், வியாபாரிகளின் நலனும் பொது மக்களுக்கு உபயோகமாகவும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

குறிப்பாக கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி பொதுமக்கள்ஏமாற்றம் அடைவது போன்றவை முற்றிலும் தவிர்த்து நேர்மையான வியாபாரத்தை மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் பொள்ளாச்சி வட்டார சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும்கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அமெரிக்கன் விஷன் கேர் கண் மருத்துவமனையின் புதிய மையம் திறப்பு விழா



சென்னை, அக் 22, அமெரிக்கன் விஷன் கேர் கண் மருத்துவமனையின் புதிய மையம் திறப்பு விழா சென்னை ஆற்காடு சாலை வளசரவாக்கத்தில் நடைபெற்றது. இம்மையத்தின் நிறுவனர் டி.பி. பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழக உணவுத்துறை அமைச்சர் வெங்கட்ராமன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் மற்றும் நடிகை சஞ்சனாசிங் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி திறந்து வைத்தனர். மேலும் அமெரிக்கன் விஷன் மையத்தின் நிறுவனர் டி.பி.பிரகாஷ் தெரிவித்ததாவது :

எங்கள் மருத்துவமனையின் சிறப்பு யாதெனில், இங்கு மட்டுமே மாஸ்டர் கண் பரிசோதனை செய்யப்படுகிறது. எங்கள் மருத்துவமனை ஒரு மில்லியன் கண்புரை அறுவை சிகிச்சை செய்த சாதனையை பாராட்டி 2017 ஆம் ஆண்டு அமெரிக்க பாராளுமன்றத்தில் " குளோபல் அச்சிவர்ஸ் ஆஃப் கேட்ராக்ட்"என்ற விருதினை பெற்றது. மேலும் கடந்த 5 வருடங்களாக தொடர்ச்சியாக "டைம்ஸ் ஆஃப் இண்டியா " நாளிதழ் அமெரிக்கன் விஷன் கேர் மையத்தை சிறந்த கண் மருத்துமனையாக தேர்ந்தெடுத்து வருகிறது. 2011 ஆம் ஆண்டு நடிகர் விவேக்" கிரீன் கலாம் " இயக்கத்தை எங்கள் மருத்துவமனையுடன் பங்கேற்றுத் தொடங்கியதை முக்கியநிகழ்வாக பெருமை கொள்கிறோம். ஐக்கிய நாடுகள் சபையில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி கண் பரிசோதனை செய்வது குறித்து உரை நிகழ்த்தியதை பாராட்டி

"குளோப் சேஞ்ச் மேக்கர்" விருது பெற்று பெற்றதன் மூலம் " அமெரிக்கன் விஷன் கேர் " மருத்துவமனையை உலகறிய செய்தது எங்கள் பயணத்தின் இன்னும் ஒரு மைல் என்று தெரிவித்தார்.

காணவில்லை

திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி காவல் நிலையம்
கு. எண்: 342/2026 U/S WOMEN MISSING
புகைப்படத்தில் உள்ளவர் 21.09.2026 அன்று காலை 10.00 மணியளவில் வீட்டிலிருந்து சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை.



பெயர் : மணிக்கொடி ,,வயது : 71
உயரம் : 6 அடி ,நிறம் : மாநிறம்
கணவர்: சுப்பிரமணி ,மொழி : தமிழ்
செல்: 8098340097
விலாசம்: வன்னியபுரம்
எலவம்பட்டி , திருப்பத்தூர் வட்டம் , திருப்பத்தூர் மாவட்டம்
அடையாளங்கள்: முகத்தின் வலது புறம், கண் கீழ்ப்பகுதியில் மச்சம் உள்ளது. வலது முழங்கையில் பச்சை குத்தப்பட்டுள்ளது.
அணிந்திருந்த ஆடை: ஆரஞ்சு நிறப் புடவை.
தகவல் தெரிந்தால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
கந்திலி காவல் நிலையம், திருப்பத்தூர் உட்கோட்டம், திருப்பத்தூர் மாவட்டம்.
தொடர்பு எண்கள்:
காவல் நிலையம்: 94981004226
காவல் உதவி ஆய்வாளர்: 9498149143

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C,246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.